செப்டம்பர் 1-ல் இயற்கை எய்தினார். ஆங்கிலம், லத்தீன், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன் போன்ற 14 மொழிகளில் புலமை பெற்றவராகத் திகழ்ந்துள்ளார். அதனால்தான் தமிழ் மொழியின் சிறப்புகளை அவரால் திறம்பட எடுத்தியம்ப முடிந்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக, பேராசிரியர் தனிநாயகம் அடிகளாருடைய நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சிறப்புக் கருத்தரங்கம், 24-12-2013-ல் நடத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 265, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

265—

பொது நூலகம்

***32665—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, கீழாநிலைக்கோட்டையில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதிக்கு உட்பட்ட கீழாநிலைக்கோட்டையில் பகுதிநேர நூலகம் திறப்பதற்கு வாடகை இல்லா இலவசக் கட்டடமும்,

2014 ஜூலை 25]

சொந்தக் கட்டடமும் கட்டுவதற்கு காலி மனையை வழங்குமாறும், பகுதிநேர நூலகம் துவங்கிட நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தருமாறும் மாவட்ட நூலக அலுவலர்மூலம் கீழாநிலைக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவரிடம் 24-1-2014 மற்றும் 15-5-2014 ஆகிய தேதியிட்ட 2 கடிதங்கள்மூலம் கேட்கப்பட்டுள்ளது. நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் கீழாநிலைக்கோட்டை பகுதியில் பகுதிநேர நூலகம் திறந்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதனைப் பூக்கள் கொண்டு சரித்திரம் படைப்பவரே எங்கள் அம்மா, வேதனைப் பூக்களில் இருந்தும் வெற்றிக் கனி பறிப்பவரே எங்கள் அம்மா. கருணை நிழல்கொண்டு கைகூப்பி வணங்கும் ஏழைகளுக்கு, மாளிகை அமைக்கின்ற மாதரசியே எங்கள் அம்மா. வாழ வழிதேடிய ஏழைப் பெண்ணுக்கு தாலிக்கொடி தந்த தாய் உருவ தெய்வமே எங்கள் அம்மா. நாக்கால் மட்டுமே பிழைத்த கும்பலை வாக்கால் துரத்தியடித்த வாழும் வேலு நாச்சியாரே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) படியரிசி மாந்தர்களுக்கு, மடிக் கணினி மாணாக்கர்களுக்கு என்று அகப்பைக்கும், அறிவுக்கும் ஒருசேர உணவிட்டு இல்லாமை, கல்லாமை இரண்டையும் தீர்த்திட்ட இன்னொரு கலைமகளே எங்கள் அம்மா. நான் நித்தம் நித்தம் வணங்கும் தாயின் திருவடிகளுக்கு எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதி, திருமயத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்திட ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாத மலர்களுக்கு என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்கி மகிழ்கிறேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் தொகுதியில் கீழாநிலைக்கோட்டையில் பாமரர் வாழ்வுக்குப் படிப்பகம் அமைத்து, பகுத்தறிவுக் கல்விக்கு வித்திட புதிய கிளை நூலகம் அமைக்க அரசின் நிபந்தனைகளை விரைவில் பூர்த்தி செய்து தருகிறோம் என்பதைத் தெரிவிக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நடப்பு நிதியாண்டில் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள திருமயம் தொகுதி, கீழாநிலைக்கோட்டையில் உள்ள மொத்த மக்கள் தொகை 2,900 ஆகும். இங்கு படித்தவர்களின் எண்ணிக்கை 2,486 ஆகும். திருமயம் தொகுதி, கீழாநிலைக்கோட்டைக்கு அருகில் 3 கி.மீ. தொலைவில் கல்லூரர் ஊர்ப்புற நூலகம் செயல்படுகின்றது. இக்கிராம மக்கள் இந்த நூலகத்தினைப் பயன்படுத்துகின்றனர். திருமயம், அரிமளம், கடியாப்பட்டி, நச்சாந்துபட்டி, குழிபிறை, இராயவரம், பொன்னமராவதி, வேந்தன்பட்டி, விராச்சிலை, நகரப்பட்டி, கல்லூரர், திருக்கலம்பூர், மறாவாமதுரை, சடையம்பட்டி ஆகிய இடங்களில் கிளை நூலகங்களும், ஆலவயல், அம்மன்குறிச்சி, ஒளியமங்கலம், ஓம்பல், தாஞ்சூர் மற்றும் பனையப்பட்டி ஆகிய இடங்களில் ஊர்ப்புற நூலகங்களும் ஆகமொத்தம் 20 நூலகங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, உரிய நிபந்தனைகளை நிறைவு செய்தவுடன் கீழாநிலைக்கோட்டையில் பகுதிநேர நூலகம் துவங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

2014 ஜூலை 25]

திரு. பி.கே. வைரமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழாநிலைக்கோட்டையில் புதிய பகுதிநேர நூலகம் அமைத்திட அனுமதி வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்தில் உள்ள நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. ஏற்கெனவே, அதற்கு இடம் வேண்டும் என்று கோரிக்கை எழுப்பப்பட்டு, சிதம்பரம் நகராட்சியில் இடம் ஒதுக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். எனவே, சிதம்பரம் நகரத்தில் உள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரத்தில் அமைந்திருக்கக்கூடிய நூலகக் கட்டடத்தினை ஆய்வு செய்து, கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*